# TAMIL

## Paper II

## ( LITERATURE )

*Time Allowed : **Three** Hours*

*Maximum Marks : **250***

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** from each section.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

munotes.in

## SECTION A

**Q1. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) தோழி அறத்தொடு நிற்றல் குறித்து ஔவையார் கூறும் குறுந்தொகைப் பாடல் கருத்தைப் புலப்படுத்துக. *10*

(b) பாரி மகளிரை விச்சிக் கோனுழைக் கொண்டு சென்ற கபிலர் கூற்றை விவரிக்க. *10*

(c) திருக்குறள் உணர்த்தும் வலியறிதலை விளக்குக. *10*

(d) இராமபிரான் கும்பகருணனிடம் எழுப்பிய வினாக்களையும் கும்பகருணன் கூறிய பதிலையும் தொகுத்துரைக்க. *10*

(e) மாணிக்கவாசகர் தம் துன்ப நிலையை நீத்தல் விண்ணப்பத்தில் வெளிப்படுத்துமாற்றை விவரிக்க. *10*

**Q2. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக :**

(a) 'ஐம்பொறிகளும் இறைவன் இன்பத்தைக் காட்டிலும் இன்பம் செய்வது போலத் துன்பமே செய்யும்' என்று மாணிக்கவாசகர் கருத்தை விளக்குக. *20*

(b) அமைச்சன் இயல்பு குறித்து திருவள்ளுவர் கூறும் கருத்துகளை விவரிக்க. *15*

(c) 'இவள் உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே' என முடியும் குறுந்கொகைச் செய்யுளில் பொதிந்துள்ள உள்ளுறையை விவரிக்க. *15*



munotes.in

**Q3. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக :**

(a) பொற்கொல்லன் சூழ்ச்சியும் கோவலன் வீழ்ச்சியும் குறித்து விவரிக்க. *20*

(b) பத்தி உணர்வுக்கும் பாலியல் சிந்தனைக்கும் உள்ள உறவை ஆண்டாளின் திருப்பாவை வழிநின்று விளக்குக. *15*

(c) 'செஞ்சோற்றுக் கடன்தீர்த்த அறவோன் கும்பகருணன்'. ஆராய்க. *15*

**Q4. கீழ்வரும் பாடற்பகுதிகள் பயிலும் இடத்தையும் அவற்றின் இலக்கிய நயத்தையும் வெளிப்படுத்துக :**

(a) 'வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்' *20*

(b) 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' *15*

(c) 'கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ ?' *15*

munotes.in

## SECTION B

**Q5.** **கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** ***10×5=50***

(a) பாரதியிடம் ஆழப்பதிந்திருந்த கண்ணன் தத்துவத்தைப் புலப்படுத்துக. *10*

(b) தாலாட்டுப் பாடல்களில் இடம் பெறும் அறுவடைச் செய்திகளைப் புலப்படுத்துக. *10*

(c) சித்திரப்பாவையில் வரும் ஆனந்தியின் பண்பு நலன்களை விளக்குக. *10*

(d) மு.வ. விள் அரசியல் குறித்த சிந்தனைகளை விளக்குக. *10*

(e) நாட்டுப்புறத் தெய்வங்களின் உருவாக்கத்தை முத்துப்பட்டன் கதை வழிநின்று விவரிக்க. *10*

munotes.in

**Q6.** **கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக :**

(a) ஜெயகாந்தனின் சமுகக் கண்ணோட்டத்தைக் ‘குருபீடம்’ சிறுகதைத் தொகுப்பு வழி விவரிக்க. *20*

(b) சமுதாயமே ஒருவரின் அவல வாழ்வுக்குக் காரணம் என்பதை ‘யாருக்கும் வெட்கமில்லை’ நாடகம் வழிநின்று விளக்குக. *15*

(c) தொழிலாளர் பாடல்களின் அமைப்பும் சிறப்பும் குறித்து ‘மலையருவி’ வழிநின்று விவரிக்க. *15*

**Q7. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக :**

(a) நா. காமராசனின் கவிதை புனையும் திறனை அவரது 'கருப்பு மலர்கள்'வழிப் புலப்படுத்துக. *20*

(b) அகிலனின் சமுதாயப் பார்வையைச் 'சித்திரப்பாவை' வழி விவரிக்க. *15*

(c) 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்பதற்குச் சான்று பாரதிதாசனின் முதியோர் காதல்' : விளக்குக. *15*

**Q8. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக :**

(a) தமிழகம் தாழ்ந்து போனதற்கு அறிஞர் அண்ணா கூறும் காரணங்களை விவரிக்க. *20*

(b) எல்லையில்லா ஆற்றல் கொண்ட காதலியாகக் கண்ணன் பாரதிக்குக் காட்சி தந்ததை விளக்குக. *15*

(c) முத்துப்பட்டன் கதை வெளிப்படுத்தும் சமூக முரண் குறித்து ஆராய்க. *15*

munotes.in

munotes.in